# முகவுரை

இத்தணிக்கை அறிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு தமிழக ஆளுநருக்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம்-Iல் இவ்வறிக்கைக்கான அடிப்படை மற்றும் அணுகுமுறையை விளக்குகிறது மற்றும் இதில் கூறப்பட்டுள்ள தகவல்கள், அரசு கணக்குகளின் கட்டமைப்பு, வரவு – செலவு திட்ட நடைமுறைகள், முக்கிய குறியீடுகள் மீதான பகுப்பாய்வு, 31 மார்ச் 2023–உடன் முடிந்த ஆண்டிற்கான பற்றாக்குறை/மிகை உட்பட மாநிலத்தின் நிதி நிலை ஆகியவை பற்றிய ஒரு கண்ணோட்டத்தையும் அளிக்கிறது.

அத்தியாயம்–IIல் மாநிலத்தின் நிதிகள் பற்றிய ஒரு பரந்த பார்வையை அளிக்கிறது; முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் முக்கிய நிதி இலக்கங்களில் முக்கிய மாற்றங்கள், 2018-19 முதல் 2022-23 வரையிலான காலகட்டத்தில் ஒட்டுமொத்த அளவிலான போக்குகள், மாநிலத்தின் கடன் நிலைமை, பொது கணக்கின் கீழ் முக்கிய நிதி நடவடிக்கைகள், ஆகியவற்றை மாநிலத்திற்கான நிதி கணக்குகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்கிறது.

அத்தியாயம்-IIIல் மாநிலத்தின் நிதியொதுக்க கணக்குகளின் அடிப்படையில் அமைந்தது; மாநில அரசின் நிதியொதுக்க முன்னுரிமைகளை சீராய்வு செய்து, வரவு – செலவு திட்ட மேலாண்மை தொடர்பான அரசியலமைப்பு சட்டத்தின் வழிவகைகளிலிருந்து தவறிய நேர்வுகள் குறித்து தெரிவிக்கிறது.

அத்தியாயம்-IVல் மாநில அரசின் பல்வேறு அதிகார அமைப்புகள் அளித்த கணக்குகளின் தரம் மற்றும் மாநில அரசின் பல்வேறு துறை அலுவலர்கள் உரிய நிதி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைமைகளை பின்பற்றாமை தொடர்பான குறிப்புகளை தெரிவிக்கிறது.

அத்தியாயம்-Vல் மாநில பொதுத்துறை நிறுவனங்களின் நிதி செயல்திறன் மற்றும் இந்த மாநில பொதுத்துறை நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளின் துணை தணிக்கையின் விளைவாக வெளியிடப்பட்ட கருத்துக்களின் தாக்கம் பற்றி விவாதிக்கிறது.

செயலாக்க தணிக்கையில் கண்டறிந்தவை மற்றும் பல்வேறு துறைகள் மீதான தணிக்கை பத்திகள் உள்ளடங்கிய அறிக்கை, சட்டப்படி அமைக்கப்பட்ட கழகங்கள், வாரியங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் மீதான தணிக்கை குறிப்புகளை கொண்ட அறிக்கை மற்றும் வருவாய் வரவினங்களின் மீதான அறிக்கை ஆகியவை தனித்தனி அறிக்கைகளாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

தமிழில் தரப்பட்டுள்ள இவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தணிக்கை குறிப்புகள் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் குறிப்புகளிலுமுள்ள உண்மைகளின் அர்த்தம் தமிழில் தரப்பட்டுள்ள அறிக்கையில் மாறுபடாமல் இருக்க எல்லாவித முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மொழிபெயர்க்கப்பட்ட இவ்வறிக்கையில் ஏதாவது சந்தேகம் எழுமானால், ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையையே அதிகாரபூர்வமானதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.